# நாட்டின் உயர்வான நிதியியல் நிறுவனத்தில் இணைந்து கொள்வதற்கான பெரும் வாய்ப்பு



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து இரண்டு ஆண்டுகள் பரீட்சித்த காலத்திற்குட்பட்டு, கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர்களாக இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவ உதவியாளர் வகுப்பிற்கு நியமிக்கப்படுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கு, அர்ப்பணிப்புச் சிந்தையுடன் தேவைக்கு ஏற்றவிதத்தில் பங்களிக்கக்கூடியவர்களும் குழுவாகச் செயற்படும் சூழ்நிலையொன்றில் பணியாற்றக்கூடியவர்களும் தேவைப்படுகின்றனர்.

## கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர் பதவி (ஆங்கிலம் மற்றும் சிங்களம்)

**1. தகுதிகள்**

ஆட்களுக்கிடையில் மிகச் சிறந்த இடைத்தொடர்பாற்றல் மிக்கவராகவும், தொடர்பூட்டல் மற்றும் நிறுவன ரீதியான தேர்ச்சியைக் கொண்டவராகவும், சிங்களம் மற்றும் ஆங்கிலம் இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராகவும் அலுவலகப் பணியினை செயலாற்றுவதில் பல்வேறு விதமான அலுவலகக் கணனி மென்பொருட்களை (MS Word, MS Excel மற்றும் MS PowerPoint போன்ற அலுவலகப் பிரயோகங்கள் (Office Applications)) பயன்படுத்தக் கூடியவராகவும் பொருத்தமான விதத்தில் பணிகளுக்கு முன்னுரிமையளிப்பவராகவும் தனிப்பட்ட உதவியாளருக்கேயுரித்தான மற்றைய பொதுவான தகுதிகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**2. பொறுப்புக்கள்**

உயர் மட்டத்தில் இரகசியத்தினையும் பற்றுறுதியினையும் பேணக்கூடியவராகவும், உரிய நேரத்தினை பின்பற்றக்கூடியவராகவும், நாட்குறிப்பினை பராமரிப்பதன் மூலமாக பல்வேறு நிகழ்வுகளையும் ஒருங்கிணைக்கக்கூடியவராகவும் உள்ளக மற்றும் வெளிவாரி தரப்பினரைத் தொடர்புபடுத்தக் கூடியவராகவும் அலுவலகக் கடிதத் தொடர்புகளை சுயாதீனமாக தயாரிக்கக்கூடியவராகவும் சொல்வதெழுதுதல் மற்றும் தட்டச்சு வேலைகள் மற்றும் ஏதேனும் வேறு செயலகப் பணிகளின் கீழான பொறுப்புக்களை மேற்கொள்ளக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**3. குறைந்தபட்சம் தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவம்**

- **கல்வித் தகைமைகள்**

  க.பொ.த. (சாதாரண) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது ஆங்கிலம் மற்றும் சிங்களம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கணிதம் உட்பட குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

  அத்துடன்,

  க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பிரிவில் மூன்று (03) பிரதான பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

- **தொழில்சார் தகைமைகள்**

  மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து சுருக்கெழுத்து (Shorthand) அத்துடன்/அல்லது தட்டச்சு வடிவமைப்பு/ தட்டெழுத்தில் (Typesetting/ Typewritng) (ஆங்கிலம்/ சிங்களம்) தொழில்சார் டிப்ளோமா/ சான்றிதழினை வெற்றிகரமாக நிறைவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்

- **அனுபவம்**

  பிரசித்தி பெற்ற நிறுவனத்திலிருந்து ஆங்கிலம்/சிங்களத்தில் தட்டெழுத்து/தட்டச்சு வடிவமைப்பில் (Typesetting/Typing) குறைந்தபட்சம் ஐந்தாண்டு அனுபவம் பெற்றவராகவும் அத்துடன் Windows மற்றும் Apple Mac இரண்டிலும் Office பிரயோகங்களுடனான சூழலிலும் பரீட்சயம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். செயலகப் பணிகளின் அனுபவம் மேலதிக அநுகூலமாகக் கருதப்படும்.

**4. பின்வரும் மேலதிகத் தகைமைகள் மேலதிக அநுகூலமாகக் கருதப்படும்**

சுருக்கெழுத்தில் தொழில்சார் டிப்ளோமா/ சான்றிதழ் பாடநெறியை நிறைவு செய்திருத்தல், தமிழில் பணியாற்றக்கூடிய திறமை

**5. வயது**

**2022.05.25** திகதியன்று வயது **35 ஆண்டுகள்** அல்லது அதற்குக் குறைவனதாக இருத்தல் வேண்டும்

விண்ணப்பதாரிகள், தொடர்புடைய கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் அத்துடன் பணி அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளை கட்டாயமாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேற்குறித்த ஆவணங்களின் பிரதிகளற்ற ஏதேனும் விண்ணப்பம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் எக்கட்டத்திலேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்

**6. ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்**

கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் ஆண்டுதோறும் இரண்டு மாத சம்பளத்திற்குச் சமமான விசேட கொடுப்பனவு, ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம், மருத்துவம், அலுவலர் கடன் வசதிகள், ஓய்வூதிய நன்மைகள் மற்றும் பயிற்சிக்கான வாய்ப்புக்கள்

## தெரிவு செய்யப்படும் முறை

இது தொடர்பில் நடாத்தப்படுகின்ற தேர்ச்சிப் பரீட்சையொன்றின் செயலாற்றத்தின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பதாரிகள் தெரிவட்டவணைப்படுத்தப்படுவர். இறுதித் தெரிவானது தேர்ச்சிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை இரண்டிற்கும் வழங்கப்பட்ட சமமான புள்ளிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். தேர்ச்சிப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களும் ஆங்கில மொழியில் இருக்கின்ற வேளையில் தட்டச்சு தேர்ச்சி ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பரீட்சிக்கப்படும். சிங்கள தட்டச்சிற்கு “Iskoola Pota” எழுத்து வடிவம் பயன்படுத்தப்படும்.

## விண்ணப்பங்கள்

விண்ணப்பப் படிவங்களை இலங்கை மத்திய வங்கியின் **http://www.cbsl.gov.lk** என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.

விண்ணப்பதாரிகளுக்கு குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பயன்படுத்துமாறு கடுமையாக ஆலோசனை வழங்கப்படுகின்றதுடன் சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவத்தின் ஸ்கான செய்யப்பட்ட பிரதிகளைத் தேவைப்படுத்தப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் சேர்த்து **hrd_recruitment@cbsl.lk** என்ற மின்னஞ்சல் ஊடாக பணிப்பாளர்/ மனித வளங்களுக்கு **2022.05.25** அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அடையத்தக்கதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**“கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர் (ஆங்கிலம் மற்றும் சிங்களம்) பதவிக்கான விண்ணப்பம்”** என்ற சொற்கள் மின்னஞ்சலின் விடயமாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

வேண்டப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் அல்லாத சகல விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் முடிவுத் திகதியன்று வேண்டப்படும் தகைமைகளையும் அனுபவத்தினையும் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவர்களாவதோடு விண்ணப்பதாரர்கள் பொருத்தமான ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையில் வழங்கத் தவறுகின்ற பட்சத்தில் இப்பதவிக்கு எந்தவொரு காரணத்திற்காகவும் நியமிக்கப்படமாட்டார்கள்.

எந்த விதத்திலேனும் செல்வாக்குத் தேடுவது தகுதியற்றதாக்கும்.

நிரப்பப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை/ ஆட்சேர்ப்பு ஒத்திவைக்கப்படுதல்/ இரத்துச் செய்யப்படுதல் என்பவற்றைத் தீர்மானிக்கும் உரிமை வங்கிக்குரியதாகும். விண்ணப்பங்களைத் தெரிவட்டவணைப்படுத்தும் போது விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகளில் உள்ளடக்கப்பட்ட பாடத் துறையுடன் தொடர்பான விடயங்களையும் அனுபவம் இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுடன் பொருந்தத்தக்கதாக இருப்பதனைத் தீர்மானித்துக் கொள்வதற்குமான தற்றுணிபினை மத்திய வங்கி கொண்டிருக்கும்.

**பணிப்பாளர் - மனிதவளத் திணைக்களம்**
இலங்கை மத்திய வங்கி, இல. 30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 0112477330 தொலைநகல்: 0112477715